8. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு 2008 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(ஈ) ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2008), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின்... (குறுக்கீடு) முதலிலேயேதான் பேசிவிட்டீர்களே, உட்காருங்கள். திரு. விடியல் எஸ். சேகர், உட்காருங்கள். (குறுக்கீடு)*

திரு. விடியல் எஸ். சேகர்: இல்லை, இது ஈரோடு நகராட்சிபற்றியது. தந்தை பெரியார் பிறந்த பூமி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வருடைய குருகுலமாக தந்தை பெரியார் பிறந்த பூமியாக இருக்கிற ஈரோட்டை நகராட்சியிலிருந்து மாநகராட்சி ஆக்கி அவருடைய கனவை நிறைவேற்றியிருக்கிற தமிழக அரசுக்கு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

@ 29-1-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாநகராட்சியாக அறிவிக்கப்படும்போது நகரத்தினுடைய வளர்ச்சிக்கு இரண்டு பணிகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். ஒன்று ஈரோடு மாநகராட்சியினுடைய போக்குவரத்து நெரிசலைச் சமாளிப்பதற்கு இரண்டு மேம்பாலங்கள் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஈரோடு மாநகரத்தைச் சுற்றி உள்வட்டப் பாதை அமைக்க வேண்டும், Ring Road அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, தந்தை பெரியாருடைய கனவை நிறைவேற்றியிருக்கிற தமிழக அரசுக்கு ஈரோடு மாநகரத்து மக்கள் சார்பிலே, ஈரோடு மாவட்டத்து மக்கள் சார்பிலே நன்றி தெரிவித்து காங்கிரஸ் பேரியக்கம் சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய கனவை நனவாக்கும் வகையில், ஈரோடு நகரத்தை மாநகராட்சியாக மாற்றுகிற இந்தச் சிறப்புமிக்க சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்தி, இன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது திருக்கரங்களாலே தொடங்கி வைக்கப்பட்டதற்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு பகுதி, சுற்றியிருக்கின்ற ஜவுளித் தொழிலை நம்பியிருக்கின்றது. அந்த ஜவுளித் தலத்திற்கு தகுந்த உயர்வைத் தேடித் தருகின்ற வகையிலே—அங்கு மாசுபடிந்த நீராக இருக்கின்ற காரணத்தால், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, இன்று ஜவுளித் துறை

முடங்கியிருக்கின்றது—அதை நம்பியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையிலே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக நசுங்கியிருக்கின்ற அந்தத் தொழிலை விரிவுபடுத்துகின்ற வகையிலே, இந்த அரசு அந்தத் தொழிலுக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகராட்சி மன்றம் தன்னுடைய தீர்மானமாக, 30-11-2004 அன்று ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக உயர்வு செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு, ஒரு தீர்மானத்தை இயற்றியிருக்கிறது. இதிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே குறிப்பிட்டு, பெருமையோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

1917 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 17 ஆம் தேதி அன்று, ஈரோடு நகராட்சியில் அன்றைக்குத் தலைவர் பொறுப்பில் இருந்த நம்முடைய ஈரோட்டுச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்கள் இந்தத் தீர்மானத்தை அப்பொழுதே கொண்டுவந்து, ஈரோடு நகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று, அவரே கையொப்பமிட்டு, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த செப்டம்பர் மாதம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முப்பெருவிழா நிகழ்ச்சி, ஈரோடு நகரத்திலே நடைபெற்றபோது, நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், அப்போது தந்தை பெரியார் அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் தீர்மானத்தை, அந்தக் கூட்டத்திலே படித்துக்காட்டி, விரைவிலே அது மாநகராட்சியாக மாற்றப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலேதான் இப்பொழுது அந்த ஈரோடு நகராட்சி, ஏறக்குறைய 90 ஆண்டு காலத்திற்குப் பிறகு, தந்தை பெரியார் கண்ட கனவு, இன்றைக்கு இந்த ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2008 பிப்ரவரி 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/ 2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. தீவிரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம்—உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றுமுன் இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே பதிவு செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்த ஒரு கருத்து, தடை செய்யப்பட்ட இயக்கங்களைப் பற்றி ஆதரித்திருப்பது குற்றமாகாது என்று சொன்னார். அது தவறு. அப்படி Supreme Court–லே சொல்லவேயில்லை" என்று ஒரு தவறான கருத்தை அவர் இங்கே பதிவு செய்திருக்கிறார். ஆனால், நான் அவருக்குத் தெரிவிக்க

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS